

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.12.2024) சென்னையில் நடைபெற்ற ஐஐடி சென்னை இயக்குநர் முனைவர் வி. காமகோடி அவர்களின் மகள் பாரதி – கேசவ் பரத்வாஜ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஐஐடி சென்னை மேலாண்மை ஆய்வுத் துறை பேராசிரியர் ப.கந்தசாமி, (ஓய்வு) மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (3.12.2024) கடலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் ஃபெஞ்சல் புயல் பாதிப்பு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் .எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .வி. செந்தில்பாலாஜி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜா, சிறப்பு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.க.நந்தகுமார், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குநர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சி.அ.ராமன், மாவட்ட ஆட்சித் தலைவர் .சிபி ஆதித்யா செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கடலூர் மாவட்டத்தில்

# மழை வெள்ளப் பாதிப்பு குறித்து ஆய்வுக் கூட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

கடலூர், டிச.04-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.12.2024) கடலூர் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் வெள்ள பாதிப்பு குறித்து வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் முன்னிலையில் பல்வேறு பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேல்பட்டாம்பாக்கம், ஜி.எஸ்.மஹாலில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 1200 பொதுமக்களுக்கு புடவை, போர்வை, ஐந்து கிலோ அரிசி, பிஸ்கட், பிரட், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் மற்றும் மதிய உணவினை வழங்கினார்.

கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னகங்கணாங்குப்பம் பகுதியில் பொதுப்பணித்துறை மூலம் வெள்ள பாதிப்புகள், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அமைக்கப்பட்டிருந்த விளக்க புகைப்படத்தினை பார்வையிட்டு, தென்பெண்ணையாற்றின் தற்போதைய நீர்வரத்து குறித்தும், குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் புகுந்தது குறித்தும் பார்வையிட்டார்.

சின்னகங்கணாங்குப்பம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவ முகாமினை பார்வையிட்டு, மழைநீர் சூழ்ந்த குடியிருப்பு பகுதிகளை பார்வையிட்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டு, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம், விக்னேஷ் மஹாலில் அமைக்கப்பட்டிருந்த நிவாரண முகாமில் 600 நபர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு 5 கிலோ அரிசி, போர்வை, கைலி, சேலை, பால் பாக்கேட், பிரட், பிஸ்கட், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வெள்ள பாதிப்பு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

கடலூர் மாவட்டத்தில் தென்பண்ணையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 4,321 குடும்பங்களைச் சேர்ந்த 6,601 ஆண்களும் 7,108 பெண்களும் 1,129 குழந்தைகள் என மொத்தம் 15,712 நபர்கள் மீட்கப்பட்டு 35 நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 36,251 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையத்திற்கு இதுவரை 261 புகார்கள் வரப்பெற்று, 94 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 35 புகார்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

341 குடிசை வீடுகள் பகுதியளவிலும், 10 குடிசை வீடுகள் முழுவதும் சேதமடைந்துள்ளது. 71 கால்நடைகள் மற்றும் 2520 கோழிகள் உயிரிழந்துள்ளது. இவர்களுக்கான இழப்பீட்டு தொகையினை விரைந்து வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடலூரில் 2 பெண்கள், ஒரு பெண் குழந்தை என மொத்தம் 3 நபர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும், 2 நபர்கள் லேசான காயத்துடன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

360 மின்கம்பங்கள் மற்றும் 2 மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அதில் 77 மின்கம்பங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும், 1.7 கி.மீ நீளத்திற்கான மின்பாதை சேதடைந்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் 51,010 ஹெக்டர் விவசாய நிலங்கள் நீரால் சூழப்பட்டுள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது.

அனைத்து பகுதிகளிலும் மழை வெள்ள பாதிப்பு குறித்த மீட்புப் பணிகளில் 9,507 அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர். பொதுப்பணித்துறை மூலம் தேவையான இடங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் ஆற்றுநீர் வராமல் தடுப்பதற்காக 22,000 மணல் மூட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளநீர் தேங்கியுள்ள பகுதிகளில் விரைந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு இயல்பு நிலையினை ஏற்படுத்திட வேண்டும். அனைத்து அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியினை முறையாக மேற்கொண்டு பொதுமக்களை பாதுகாத்திட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மேலாண்மை இயக்குநர்/தலைவர் ம.நந்தகுமார், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன், மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார், மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி இரா.சரண்யா, மாநகராட்சி ஆணையாளர் மரு. எஸ்.அனு உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சைதை மேற்குப் பகுதிக் கழக வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவிப்பு!

சென்னை, டிச.04-

சைதை மேற்குப் பகுதி கழகம் சார்பில் இன்று வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது என பகுதிக் கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. தெரிவித்துள்ளார்.

சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக்குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதியில் உள்ள 6 வட்டங்களை சார்ந்த வட்ட செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் இன்று (4.12.2024-புதன்கிழமை) காலை 10 மணியளவில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் களக்காடிஎல்லப்பன் தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு 6 வட்டங்களை சார்ந்த வட்ட செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன் ஆகியோர் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்து தருமாறு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொருள் : வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.


வடசென்னை வளர்ச்சித் திட்டம்
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, எரிசக்தி துறை,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, உள்துறை
வடசென்னை வளர்ச்சித் திட்டம்



நாள் 04.12.2024, புதன்கிழமை | நேரம் : மாலை 5.30 மணி | இடம் : தண்ணீர் தொட்டி தெரு, வால்டாக்ஸ் சாலை, சென்னை.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்
ரூ.6,309 கோடி மதிப்பீட்டில் 252 திட்டங்கள்
முதற்கட்டமாக ரூ.2,097 கோடி மதிப்பீட்டில் 87 புதிய திட்டங்களுக்கு
14.03.2024 அன்று பணிகள் துவக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன
இரண்டாவது கட்டமாக ரூ.1,383 கோடி மதிப்பீட்டில் 79 புதிய திட்டப்பணிகளை
துவக்கி வைத்து மற்றும் 29 முடிவுற்ற பணிகளை திறந்து வைப்பவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில்
வால்டாக்ஸ் சாலையில் 700 புதிய குடியிருப்புகள் மற்றும் ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் 776 புதிய குடியிருப்புகள், சமுதாயக்கூடங்கள், விளையாட்டு அரங்கங்கள், நூலகங்களை மேம்படுத்துதல், புதிய காவல் நிலையம் போன்ற 15 புதிய திட்டப்பணிகள்
மதிப்பீடு ரூ. 421 கோடி

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்
பல்நோக்கு மையங்கள், பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், பூங்காக்களை மேம்படுத்துதல், மின்மாற்றிகளை சுற்றி பார்வை மறைப்பான்கள் அமைத்தல் என 29 முடிவுற்ற பணிகள் பேருந்து நிலையங்கள், உடற்பயிற்சி கூடங்கள்,விளையாட்டு மைதானங்கள், மறுவாழ்வு மையங்கள் என 45 புதிய திட்டப்பணிகள்
மதிப்பீடு ரூ. 242 கோடி

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில்
குடிநீர் குழாய்கள் சீரமைத்தல் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களை மேம்படுத்தும் பணி என 13 புதிய திட்டப்பணிகள்
மதிப்பீடு ரூ. 440 கோடி

தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பில்
தடையில்லா மின்சாரம் வழங்க புதிய துணை மின் நிலையம் மற்றும் 310 ஆர்.எம்.யு மின் உபகரணங்கள் நிறுவும் பணி
மதிப்பீடு ரூ. 70 கோடி

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்
3 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி
மதிப்பீடு ரூ. 134 கோடி

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்
பெரியார் நகர் அரசு மருத்துவமனைக்கு புதிய மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்
மதிப்பீடு ரூ. 77 கோடி

செ.ம.தொ.இ./ 1201 /வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 600 009